## திருப்பரங்குன்றம் தீப விவகாரம்: மத மோதலை உருவாக்கி

# தமிழ்நாட்டை வன்முறைக் களமாக்க இந்துத்துவ சக்திகள் முயற்சி!

### தனி நீதிபதி மீது ‘இம்பீச்மெண்ட்’ நடவடிக்கை எடுக்க வேண்டும்! கட்சிகளின் தலைவர்கள் கடும் கண்டனம்!

**சென்னை, டிச. 5 -**

**மதமோதலை உருவாக்கி அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் இந்துத்துவ சக்திகளை இரும்புக்கரம் கொண்டு தமிழ்நாடு அரசு ஒடுக்க வேண்டும் என்று அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டன அறிக்கைகள் விடுத்துள்ளனர்.**

நீதிபதி சுவாமிநாதனைக் கண்டித்து தலைவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

**செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்)**



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆன்மீகத்தில் எப்போதும் அரசியல் கலக்கக்கூடாது, ஆன்மீகத்தை வைத்து கலவரம் செய்யக்கூடாது அவ்வாறு செய்ய நினைப்பவர்களை அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆன்மீகத்தை வைத்து கலவரம் இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும் ஆன்மீகத்தில் எப்போதும் அரசியல் கலக்கக்கூடாது, ஆன்மீகத்தை வைத்து கலவரம் செய்யக்கூடாது அவ்வாறு செய்ய நினைப்பவர்களை அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்.

**வைகோ (ம.தி.மு.க.)**



ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், திருப்பரங்குன்றம் மலை உச்சியில் வழக்கமாக கடந்த பல 10 ஆண்டுகளாக தீபம் ஏற்றப்பட்டு வந்த உச்சிப் பிள்ளையார் கோவில் தீப மண்டபத்தில் தீபம் ஏற்றாமல், சிக்கந்தர் தர்காவிற்கு அருகே கார்த்திகை தீபம் ஏற்றுவதன் மூலம் சமய நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயலும் மதவாத சக்திகள் திருப்பரங்குன்றத்தில் வழிபாட்டுத் தலத்தை வன்முறை களமாக மாற்றத் துடிப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டில் மதவாத சக்திகள் அரசியல் ஆதாயம் அடைவதற்கு திருப்பரங்குன்றத்தில் சமூக அமைதியை கெடுக்க முயல்வதை அனுமதிக்கக் கூடாது. தமிழ்நாட்டு மக்களும் அதற்கு இடம் தர மாட்டார்கள் என்று அவர் கூறியுள்ளார். காலம் காலமாக பின்பற்றப்படும் மரபுகளை மீறி மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்த முயற்சிக்கும் இந்துத்துவ மதவாத சக்திகளை தமிழ்நாடு அரசு இரும்பு கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்று வைகோ வலியுறுத்தியுள்ளார்.

**பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட்)**



திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றும் விவகாரம் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு கண்டனத்துக்குரியது.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தனது உத்தரவின்படி தீபம் ஏற்றப்படாத நிலையில், மனுதாரர் உயர் நீதிமன்றத்தில் பாதுகாப்புப் பணியில் உள்ள CISF வீரர்களை அழைத்துச் சென்று தீபம் ஏற்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு வன்மையான கண்டனத்துக்குரியது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

**வீரபாண்டியன் (இந்தியக் கம்யூனிஸ்ட்)**



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்து முன்னணியினர் திருப்பரங்குன்றம் மலைக்குச் சென்று, அமைதியாக நடந்து கொண்டிருந்த தீப வழிபாட்டுக்கு இடையூறாக, கலக சூழலை உருவாக்கியதையும், அமைதிப்படுத்த முயன்ற காவல் துறையினர் மீது கல்வீசி தாக்குதல் நடத்தியதையும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி கடுமையாக கண்டிக்கிறது என்று தெரிவித்துள்ளார். இந்து முன்னணியும் அதன் ஆதரவு அமைப்புகளும் தமிழ்நாட்டில் மத மோதலை உருவாக்கி, அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலில் சில ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றன. இப்போது திருப்பரங்குன்றத்தை மையப்படுத்தி தனது திட்டத்தை தீவிரமாக முன்னெடுத்திருப்பதை, மதுரை மாவட்ட மக்களும், தமிழக மக்களும், ஆன்மீக நம்பிக்கையாளர்களும் கருத்தில் கொண்டு, சமூக நல்லிணக்க சூழலை சீர்குலைக்கும் சக்திகளை நிராகரிக்க வேண்டும் என்றும், அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்றுபட்டு நின்று, சமூக நல்லிணக்க சூழலை பாதுகாக்க வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தொல்.திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள் கட்சி)**



திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தேவையில்லாத சமூகப் பதற்றத்தை ஏற்படுத்தியதோடு, மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க முயற்சித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் மீது சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

திருப்பரங்குன்றம் பிரச்சினையில் மட்டுமல்லாது பல்வேறு பிரச்சினைகளிலும் பொது அமைதியை சீர்குலைக்கும் விதமாகத் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் ஜி.ஆர்.சுவாமிநாதனை நீதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு இம்பீச்மெண்ட் நடவடிக்கையை இந்தியா கூட்டணி தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று திருமாவளவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருப்பரங்குன்றத்தில் வன்முறை ஏற்படாமல் தடுத்து அமைதியை நிலைநாட்டிய தமிழ்நாடு அரசுக்கும், கலவரத்தில் ஈடுபட்டவர்களின் ஆத்திரமூட்டலுக்கு இடம் கொடுக்காமல் மத நல்லிணக்கத்தைக் காப்பாற்றிய திருப்பரங்குன்றம் பொதுமக்கள் அனைவருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதாக தொல். திருமாவளவன் குறிப்பிட்டுள்ளார்.

**வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமை கட்சி)**



தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருப்பரங்குன்றம், தமிழர் பாரம்பரியம், ஆன்மீக அமைதி ஆகியவற்றுக்குரியப் புனித மலை என்று தெரிவித்துள்ளார். இந்த புனிதமான இடத்தைக்கூட அரசியல் இலாபத்துக்காகவும், மோதலை உருவாக்கவும் முயற்சித்ததன் பின்னணியில், பா.ஜ.க.வின் மாபெரும் சூழ்ச்சி வெளிப்பட்டுள்ளது என்று அவர் குற்றம்சாட்டியுள்ளார். ஆன்மீகத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மோதலை உருவாக்கி தமிழ்நாட்டு அரசியலை கைப்பற்ற பா.ஜ.க., முயற்சிப்பதாக அவர் சாடியுள்ளார். கலவரத்தைத்தூண்டும்வகையில்பா.ஜ.க.,வின் துணை அமைப்புகள் செயல்பட்டது, அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் விடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தல் என்று தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டைக் கலவர மேடையாக்கும் பா.ஜ.க.,வின் சதிகார அரசியலுக்கு வேல்முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

---

## இலவச கட்டாயக் கல்வி:

# தனியார் பள்ளிகளுக்கு ரூ.876 கோடி!

### தமிழ்நாடு அரசு விடுவித்தது!

*சென்னை, டிச. 5 -*

இலவச கட்டாயக் கல்வி சட்டத்தின் கீழ், தனியார் பள்ளிகளில் ஏழை, எளிய மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் செலுத்த 876 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு விடுவித்துள்ளது.

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் மற்றும் தமிழ்நாடு அரசின் குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமை விதிகள்படி, நலிவடைந்த, வாய்ப்பற்ற பிரிவினரின் குழந்தைகள் தனியார் பள்ளிகளில் எல்.கே.ஜி. முதல் 8 ஆம் வகுப்பு வரை 25 சதவீதம் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளுக்கு கல்விக் கட்டணத்துக்கு ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

அதன்படி, 2023-24ஆம் கல்வியாண்டுக்கு எட்டாயிரம் தனியார் பள்ளிகளில் ஆர்டிஇ சட்டப்படி மாணவர்களுக்கான கல்விக் கட்டண ஈட்டுத்தொகை வழங்க 424 கோடியே 98 லட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு அதற்கான நிதியை விடுவித்துள்ளது.

இதேபோல், 2024-25ஆம் கல்வியாண்டுக்கான 450 கோடியே 85 லட்சம் ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இரு கல்வியாண்டுகளுக்கும் மொத்தம் 875 கோடியே 83 லட்சம் ரூபாயை தமிழ்நாடு அரசு விடுவித்துள்ளது. கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கான கல்விக் கட்டணத் தொகை விடுவிக்கப்பட்டதற்கு, தனியார் பள்ளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

---

## டாலருக்கு நிகரான

# இந்திய ரூபாயின் மதிப்பு கடும் சரிவு!

*மும்பை, டிச. 5 -*

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 2வது நாளாக கடும் சரிவை சந்தித்துள்ளது.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்படாததால், இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியை நோக்கி செல்வதாக கூறப்படுகிறது.

இறக்குமதியாளர்களுக்கு டாலர் தேவை அதிகரிப்பு, கச்சா எண்ணெய் விலை உயர்வு உள்ளிட்டவையும், ரூபாய் மதிப்பு சரிய காரணமாக அமைந்துள்ளன.

இதனிடையே, டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு நேற்று முன்தினம் 90 ரூபாய் 14 பைசாவாக சரிந்த நிலையில், நேற்று 90 ரூபாய் 42 பைசாவாக மேலும் நேற்று சரிவடைந்துள்ளது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால், இந்திய ரூபாய் மதிப்பு தொடர் வீழ்ச்சியை சந்தித்து வருவதாகவும், இதனால், கச்சா எண்ணெய், மின்னணு பொருட்கள் உள்ளிட்ட இறக்குமதி பொருட்களின் விலை உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் கல்வி கற்கும் இந்திய மாணவர்களின் கல்வி, பயண செலவுகளும் அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

---

## மேற்கு மண்டலத்தில் கொள்கைப் பற்றோடு

# கழகம் வளர்த்த செயல் வீரர் வி.கருப்பண்ணன்!

### மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச. 5 -**

**“மேற்கு மண்டலத்தில் கொள்கைப் பற்றோடு கழகம் வளர்த்தவர் வி.கருப்பண்ணன்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

கழகப் பொதுக்குழு உறுப்பினர் வி.கருப்பண்ணன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

உப்பிடமங்கலம் பேரூராட்சித் தலைவர், உப்பிடமங்கலம் பேரூர் கழகச் செயலாளர், மாவட்டக் கழகப் பொருளாளர் ஆகிய பொறுப்புகளில் திறம்படச் செயல்பட்டு, மேற்கு மண்டலத்தில் கொள்கைப் பற்றோடு கழகம் வளர்த்த செயல்வீரர்தான் வி.கருப்பண்ணன் அவர்கள். போராட்டமானாலும் பொறுப்பானாலும் இரண்டையும் ஒன்று போலக் கருதிய தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்பான அவரது மறைவு கரூர் மாவட்டக் கழகத்துக்குப் பெரும் இழப்பு.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது துணைவியார் உப்பிடமங்கலம் பேரூராட்சித் துணைத் தலைவர் திருமதி பாக்கியலட்சுமி உள்ளிட்ட குடும்பத்தாருக்கும், கரூர் மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.




ஆற்காடு ஊராட்சி ஒன்றியம். முப்பதுவெட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.35.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெயசந்திரகலா ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், திருமதி.ந.செ.சரண்யாதேவி. திருமதி.ஜெயந்தி திருமூர்த்தி, திருமதி.புவனேஸ்வரி சத்தியநாதன், திருமதி ஸ்ரீமதி நந்தகுமார், திருமதி காந்திமதி பாண்டுரங்கன், செந்தில்குமார், அன்பரசன், வெங்கடேசன், திருமதி சுமதி சீனிவாசன் மற்றும் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி ஒன்றிய செயலாளர்கள் எம்.வி.பாண்டுரங்கன் ஏ.வி.நந்தகுமார் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

